# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2010

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனையின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

இலங்கை கணக்கீட்டு நியமம் 03

(i) ஐந்தொகையில் பெயரளவு முதலீடு வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்கள், நடைமுறைப்பொறுப்புக்கள் என்பன சில வகைப்படுத்தல்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் அனைத்து நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் அவ்வாறு வகைப்படுத்தப்படாமல் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தளபாடம் மற்றும் பொருத்திகள், இயந்திரம் மற்றும் பொறி என்பவற்றின் மொத்தப்பெறுமதி ரூபா 30,356,713 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அதன் மொத்தப்பெறுமதி ரூபா 27,574,955 ஆக இருந்ததனால் ரூபா 2,781,758 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய கணக்குகள் தொடர்பாக ரூபா 132,268,342 தொகை நிலுவையாக இருந்ததுடன், அதில் ரூபா 11,705,974 ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக மீதியாகக் காணப்பட்டது. அவ்வாறே. செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 348,162,618 தொகை தீர்க்கப்படாதிருந்ததுடன், அதில் ரூபா 203,664,853 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதியாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 25 கணக்கு மீதிகளுக்குரிய ரூபா 59,062,370 தொகையான கிடைக்க வேண்டிய மீதிகளுக்காக உறுதிப்படுத்தல்களும் 42 கணக்குகளுக்குரிய ரூபா 67,326,542 தொகையான செலுத்தவேண்டிய மீதிகளுக்காக உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி விசேட ஏற்பாட்டுச் சட்டம் | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட 89 கொடுப்பனவு சந்தர்ப்பங்களில் |

| | |
|---|---|
| | ரூபா 2,175 ஆன முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது ரூபா 842,632 தொகையான வாகன விபத்தொன்று இடம்பெற்றிருந்த போதிலும், நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நி.பி ஏற்பாடுகளின படி நடவடிக்கைக் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்த உரித்துள்ள உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அரச வாகனங்கள் தவிர ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டு நிறுவகத்தின் பெயரும் பொறிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 349,904,721 இலாபமாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 307,973,373 ஆக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 41,931,348 தொகையிலான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானமும் சேவைகளை வழங்குவதால் கிடைத்த வருமானமும் அதிகரித்தமையே மீளாய்வாண்டில் நிதிசார் விளைவு அதிகரித்தமைக்கு தாக்கமளித்திருந்தன.

### 2.1.2 பகுப்பாய்வுடன் கூடிய நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் 18.63% அதிகரிப்பொன்றையும் மீண்டுவரும் செலவினம் 28.77% அதிகரிப்பொன்றையும் காட்டியதுடன் மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகளால் பெற்ற இலாபம் 13.61 % ஆல் அதிகரித்திருந்தது.

### 2.1.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையின் பதவியணிக்காக தனிப்பட்ட திடீர் விபத்து இழப்பீட்டிற்காக 2010 சனவரி 01 முதல் 2010 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக ரூபா 179,322 தொகை செலுத்தப்பட்டு காப்புறுதி உறுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கையில், 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகித முதல் 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வேறொரு காப்புறுதிக் கம்பனியிடமிருந்து தனிப்பட்ட திடீர் விபத்து இழப்பீட்டிற்காக ரூபா 72,860 செலுத்தி காப்புறுதி உறுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டின் ஆரம்பத்தின் போது மீளக் கிடைக்க வேண்டிய ரூபா 11,578,000 தொகையான பெறுமதி சேர்க்கப்பட்ட வரித்தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 14,434,077 ஆக இருந்த போதும், அவ்வாறான தொகையொன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க இருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றுகை

பின்வரும் செயலாற்றுகை சுட்டிக்காட்டியின்படி, முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் செயலாற்றுகையில் குறைவு தென்பட்டது.

| | விடயம் | விபரம் | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| (அ) | விமான நகர்வுகள் | (i) வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் | 1,024 | 1,057 | 1,317 |
| | | (ii) நிரந்தர விமானப் போக்கு வரத்து கம்பனிகள் - விமானம் | 30,621 | 27,545 | 32,590 |
| (ஆ) | பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வு | (i) செயற்பாட்டு ஒருங்கிணைப்பு | 02 | 01 | 01 |
| | | (செயற்பாடும் பொருத்தத் தன்மையும்) | 01 | - | - |
| | | விமானங்கள் | 01 | 01 | - |
| (இ) | நிறைவேற்றப்பட்ட -- / பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை செயற்பாடு கள் | (i) ரூம்ப் ஆராய்ச்சி (விமானங்களின் பொருத்தத் தன்மை) | 23 | 72 | 30 |
| | | (ii) ரூம்ப் ஆராய்ச்சி (ஒன்றிணைந்த) | 02 | - | - |
| | | (iii) சிறிய விமான நிலையம் | 09 | 10 | 09 |
| | | (iv) அபாயகரமான பொருட்கள் | - | 19 | 08 |

### 2.2.2 சேவைக் கட்டணங்கள்

அதிகாரசபையால் விமான ஓட்டுனர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், உயரமான கட்டிடங்களுக்காக அங்கீகாரம் வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் கடந்த 06 ஆறு ஆண்டுகளில் திருத்தப்படாதிருந்தது. இதன் காரணமாக அதிகாரசபை அச்சேவையை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொகைக்கு போதியளவில் கட்டணங்கள் கிடைக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அதிகாரசபையால் பாடநெறிகளை நடாத்துவதற்காக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 03 மாதப் பாடநெறி ஒன்று மட்டும் 20 பேருக்கு நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 972,593 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பாடநெறியை நடாத்தியமையால் ரூபா 384,136 தொகை மட்டுமே

கிடைத்திருந்ததனால் ரூபா 588,457 ஆன நட்டமொன்று அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்தது.

### 2.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின்போது பாதீடுசெய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே 75% முதல் 165% வரையிலான வீச்சில் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) செலவின முகாமைத்துவம்

(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்